2011 செப்டம்பர் 7]

ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாதது. இதற்கு தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

87—

கட்டட வசதி

***555—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரிலுள்ள நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலம் கிளை நூலகத்திற்கு, விருத்தாசலம் வட்டம் மற்றும் நகரம் வார்டு ஈ. பிளாக் 61, டவுன் சர்வே 10-ல் 39,000 சதுர மீட்டர் பரப்பளவு அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தினை, நில மாற்றம் செய்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது மேற்படி இடத்தில் மாணவர் விடுதி கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் விருத்தாசலம் கிளை நூலகத்திற்கு மாவட்ட நூலக அலுவலர்மூலம், மாவட்ட நிருவாகம் மாற்று இடம் ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் விருத்தாசலத்திற்குக்

கிளை நூலகம் சொந்தக் கட்டடத்தில் அமைய ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பகுதியில், குறிப்பாக நகரத்தில் சுமார் 444 sq.metre இடம் நூலகத்திற்காக தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்திலேயே இந்த இடம் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. தற்போது, அதற்கு நிதி ஒதுக்கி கட்டடம் கட்டுவதுதான் பாக்கியாக உள்ளது. அதனால் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும், எப்போது துவக்கப்படும், என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி அதற்கு ஒதுக்கப்பட்ட இடம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் மாவட்ட நூலக ஆணைய குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டவுடன், அதற்குத் தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் விரைவிலே கட்ட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று, அது கட்டிக்கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்பத்குமார், நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் திரு. முத்துக்குமார் அவர்கள் இன்னுமொரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறார். (குறுக்கீடு) Please உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் புதியதாக 77 ஆடியோ லைப்ரரிக்கு நபார்டு வங்கிமூலம் நிதியுதவி பெற்று செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அந்த ஆடியோ லைப்ரரி விருத்தாசலம் பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட

2011 செப்டம்பர் 7]

லைப்ரரி அலுவலர் தெரிவித்துள்ளார். அதற்கான இடமும் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. ஆகையால் அது எப்போது துவக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் மாவட்ட நூலக அலுவலரிடமிருந்து, மாநில நூலக ஆணையக் குழுவிற்கு அந்தப் பரிந்துரை வரப்பெறவில்லை. அது வந்தவுடன் விரைவாக அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியாய், ஆயிரமாயிரம் திட்டங்கள் தந்து தமிழகத்தை தரணியில் முதன்மையான பூமியாக மாற்ற வந்த அன்னை, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு வணங்கி, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வாணியம்பாடி நகரப் பகுதியிலே கட்டப்பட்ட பழைய கட்டடத்தில் நூலகம் இயங்கி வருகிறது. அங்கே வாசகர்கள் உட்கார்ந்து படிக்க வசதி இல்லை. புத்தகங்களை அடுக்கி வைக்கவும் வசதி இல்லாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே புதிதாக ஒரு நூலகக் கட்டடம் கட்டித் தர ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 செப்டம்பர் 7

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, மிகப் பழைமையான அந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற அந்த நூலகத்தில் இருக்கின்ற நூல்கள் எல்லாம் பழுதடைகின்ற நிலையில் இருக்கின்றன. வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்குப் போதிய இடவசதி இல்லையென்று சொல்கின்றார். மாவட்ட நூலக அலுவலர்களை அனுப்பி, அது ஆராயப்பட்டு, அப்படி இருக்கின்றபட்சத்திலே மாண்புமிகு அம்மாவினுடைய அனுமதி பெற்று கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்கின்ற அளவுக்கு அங்கே புதியதாக வேறு கட்டடம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

88—

கூட்டுறவு வங்கி

623*—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வர்த்தக வங்கிகள்போல கூட்டுறவு வங்கிகளை வளப்படுத்தி கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.